பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹு   தை மீ 24 உ   புதன்கிழமை   (06-02-1991)   UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY   கதிர்: 7

# தமிழகத்தில் இன்று ஹர்த்தால்

# கலவரம் வெடிக்கும் ஆபத்து!

## 12 இராணுவ அணிகள் விரைவு

### முன் எச்சரிக்கையாக 50 ஆயிரம் பேர் கைது

சென்னை, பெப். 6

தி.மு க. அரசு கலைக்கப்பட்டதை எதிர்த்து தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் இன்று தமிழகத்தில் ஹர்த்தால் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஹர்த்தாலை ஒட்டி அங்கு பெரும் கலவரம் ஏற்படலாம் என அஞ்சப்படுகிறது.

வன்செயல்கள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள 12 துணை இராணுவ அணிகள் ஈடுபடுத்தப்படும் என்று மாநில ஆளுநரின் விசேட ஆலோசகர் திரு. கார்த்திகேயன் தெரிவித்தார்.

மேலும் இரண்டு துணை இராணுவ அணிகளை அனுப்பும்படி மத்திய அரசுக்கு கோரிக்கை விடப்பட்டிருப்பதாக அவர் மேலும் சொன்னார்.

இதேவேளை —

தி.மு. க. ஆதரவாளர்கள் சுமார் 50 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக அக்கட்சியின் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்தார்.

ஆனால் வன்செயல் ஏற்படாமல் தடுப்பதற்காக — முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக — 20 ஆயிரம் பேர் வரை கைது செய்யப்பட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹர்த்தாலை ஒட்டி நேற்று மட்டும் சென்னை நகரில் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக ஆயிரத்து 400 பேர் வரையில் கைது செய்யப்பட்டனர்.

அடையாறு பகுதியில் வைத்து ஈழத் தமிழர் 10 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் —

தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து பத்துப் பேர் வரை தீக்குளித்ததாக பி பி. ஸி. நேற்றிரவு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ரவைவெடித்து சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், பெப். 6

துப்பாக்கி ரவையை நிலத்தில் குத்தி விளையாடிய சிறுவன் திடீரென ரவைவெடித்ததால் காயமடைந்தான்.

நல்லூர் அரசடியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் சோமசுந்தரம் பிரேமநாத் (வயது 15) என்ற சிறுவனே காயமடைந்தான். (உ-15)

## மாத்தயாவின் பேட்டி நேற்று பி. பி. ஸியில்

லண்டன், பெப். 6

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. சோ. மகேந்திரராஜா (மாத்தயா) பி. பி. ஸி செய்தியாளர் கிறிஸ்தோபர் மொறிஸனுக்கு கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வழங்கிய பேட்டியை பி. பி. ஸி நேற்று ஒலிபரப்பியது.

[illegible] ந்த முதலாம் திகதி முதல் ஒரு [illegible] யுத்தநிறுத்தம் ஒன்றை விடு[illegible] புலிகள் அறிவித்தமைக்கான கா[illegible] [illegible] பேச்சுவார்த்[illegible] வர்களுக்கு விடுதலைப் புலிகள் தயாராக இருப்பது ஆகியவை உட்பட முக்கிய விடயங்கள் குறித்து திரு. மாத்தயா வெளியிட்ட கருத்துகள் அவரது சொந்தக் குரலிலேயே பி. பி. ஸியில் ஒலிபரப்பப்பட்டது. [உ-5]

## மணற்பிட்டியில் தாய், மகள் பலி!

யாழ்ப்பாணம், பெப். 6

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச் சோலை அருகே மணற்பிட்டியில் கடந்த சனியன்று இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு தாயும் மகளும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மீனவர்கள் மீது படை தாக்குதல்

பருத்தித்துறைக் கடற் பகுதியில் சிறு படகுகளில் சென்று மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் நேற்று நண்பகல் 12 மணியளவில் ஸ்ரீலங்கா கடற்படையினரால் கடலில் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-5)

## கர்ப்பிணிகள் உயிரிழப்பு உயர்வு

யாழ்ப்பாண மாவட்டத்தில் யுத்தம் ஆரம்பித்த பின்னர் — 1990 ஆண்டின் கடைசி ஆறு மாத காலத்தில் — பிரசவகால மரணங்கள் இருமடங்காகியிருக்கின்றன.

தாய் சேய் நல அதிகாரி டாக்டர். திருமதி பொன்னம்பலம் இத்தகவலை வெளியிட்டார்.

1990 ஆம் ஆண்டில் முதல் ஆறு மாத காலத்தில் 12 கர்ப்பிணிகளும் —

கடைசி ஆறு மாத காலத்தில் 24 கர்ப்பிணிகளும் — பிரசவ காலத்தில் மரணமாகியிருக்கின்றனர்.

போஷாக்கின்மையால் ஏற்பட்ட இரத்தச் சோகையே இத்தகைய மரணங்களுக்கு முக்கிய காரணியாக இருந்ததாக டாக்டர் திருமதி பொன்னம்பலம் மேலும் கூறினார். (உ-18)

## முச்சந்தி முரளி



உவர் தொண்டாவுக்கு, இடைக்கிடை ஞானம் பிறக்கிறது கண்டியளோ......!

## பாதுகாப்பு வலயத்தில் நேற்று ஹெலித் தாக்கு!

யாழ். போதனா ஆஸ்பத்திரியின் பாதுகாப்பு வலயத்திற்குள் நேற்றுக் காலை 8 30 மணியளவில் ஹெலிக்கொப்டர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தது.

யாழ். நகரப் பகுதியில் சுமார் பத்து நிமிட நேரம் வட்டமிட்ட ஹெலிக்கொப்டர் அப்பகுதியில் விட்டுவிட்டு வேட்டுக்களைத் தீர்த்தது. இதனால் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கடை, கட்டடங்களில் ரவைகள் விழுந்து சிதறின.

நாவாந்துறை, காக்கைதீவு ஆகிய பகுதிகளிலும் ஹெலித் தாக்குதல் இடம் பெற்றது. [உ 15]

## வவுனியாவில் தாக்குண்ட இளம் குடும்பஸ்தர்கள்

யாழ்ப்பாணம், பெப். 6

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்துகொண்டிருந்த பல தமிழ் இளம் குடும்பஸ்தர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா இராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு ஆளாகிக் காயமடைந்தனர்.

இவர்களில் சிலர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

புளொட் மற்றும் இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் இராணுவத்துடன் இராணுவமாக நின்றனர். அவர்கள் இளம் குடும்பஸ்தர்களை தமிழில் சில கேள்விகள் கேட்டனர். கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் மௌனம் சாதித்தவர்களையும், இல்லை என்று பதில் கூறியவர்களையும் இராணுவத்தினர் கடுமையாகத் தாக்கினர்.

இதுவரை இளைஞர்கள்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வங்கியில் பணம்

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் இன்று தொடக்கம் வாடிக்கையாளர்களுக்கு பணம் வழங்கப்படும் என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

குறிப்பிட்ட எண்ணிக்கையானோருக்கு தலா ஆயிரம் ரூபா கொடுக்கப்படும் என்றும் —

ஓய்வூதியக்காரர்களுக்கு முன்னுரிமை தரப்படும்—என்றும் அந்த வட்டாரங்கள் தகவல் தந்தன. (அ)

## தீர்வு காண்பதற்கு புலிகளுடன் பேசுங்கள்

### தொண்டமான் சொல்கிறார்

தமிழர் பிரச்சினை தீர வேண்டுமானால், விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசியல் ரீதியாகப் பேசி முடிவு காண்பதற்கு இலங்கை அரசு முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் தொண்டமான் தெரிவித்திருக்கிறார்.

"சண்டே ரைம்ஸ்" ஆங்கில வார இதழுக்கு திரு. தொண்டமான் அளித்த பேட்டியில் சொன்னதாவது;

இந்திய - இலங்கை உடன்பாட்டை முழுமையாக இலங்கை அரசு அமுல் நடத்த வேண்டும்.

உடன்பாட்டில் உள்ள கோட்பாடுகள் நிறைவேற்றப்பட்டால் ஒழிய தமிழர்களின் குறைகள் நீங்காது.

தமிழர் பிரச்சினை தீர வேண்டுமானால் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசியல் ரீதியாகப் பேசி முடிவு காண்பதற்கு இலங்கை அரசு முயற்சிக்க வேண்டும் - என்றார். (வீ-எ)

## கிளாலி இறங்குதுறை குண்டு வீச்சால் சேதம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இரண்டு பொம்மர்கள் கிளாலி இறங்குதுறையை குறிவைத்து குண்டுகளை வீசித் தாக்குதலை நடாத்தின.

இத் தாக்குதலில் இறங்குதுறைப் பாலம் பகுதி சேதமடைந்தது; கரையில் கட்டி நின்ற பல வள்ளங்கள் உருக்குலைந்தன; தேவாலயம் ஒன்று பல வீடுகள் கடைகள் ஆகியனவும் சேதமடைந்தன.

வெடிக்காத நிலையில் இரண்டு குண்டுகள் மீட்கப்பட்டன. (உ-117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இரட்டைப் பொக்ஸ் ஸ்பிறிங் (Twin Box Spring) கட்டில்கள், மெத்தைகள் அண்மையில் புதுப்பிக்கப்பட்டவை. தொடர்பு:- 17B, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

(15766)

அல்சேசன் நாய் (1½ வருடம்), Car (A 40 Ferina) Audiotape Recorder (Pioneer) Box உடன் விற்பனைக்குண்டு No. 22 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (15768)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கண்டுகொள்ளுங்கள். "சக்தி சரவணா" 510 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 6 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (15726)

### கண்டெடுத்த கடிகாரம்

கடந்த 28ம் திகதி கைதடிக்கும், சாவகச்சேரிக்கும் இடையில் கண்டி வீதியில் ஒரு கைக் கடிகாரம் என்னால் கண்டெடுக்கப்பட்டது. உரியவர் தொடர்பு கொள்ளவும். க. இரத்தினசிங்கம், ஸ்ரீ சாயிராம் கிளினிக், 410, பீ. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். அல்லது வீதி அபிவிருத்தி நிர்மாணத்துறை நிறுவனம், (RCDC) வவுனியா.

(C/5730)

### ஒப்செட் கலெண்டர்கள்

கடவுள் படங்கள், குழந்தைகள் படங்கள், சினிமா படங்கள், கண்ணைக் கவரும் வர்ணங்களில் விதவிதமாக அச்சிடப்பட்ட 1991ஆம் ஆண்டு கலெண்டர்கள் (மீரா வெளியீடுகள்) வியாபாரிகளுக்கு கழிவுடன் போட்டோஸ்டிக் பிரதிகளும் உடன் செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை நல்லூர், மயிலன் புத்தகசாலை பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(15763)

### பரிசு தரும் 'அக்கினி'

மீரா வெளியீடான "அக்கினி" நாவலை வாங்கியவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி உடனேயே அனுப்புங்கள். குலுக்கலில் தெரிவு செய்யப்படும் பத்து வாசகர்களுக்கு, ஒவ்வொருவருக்கும் 400/- ரூபா பெறுமதியான புத்தகங்கள் வழங்கப்படும். ஸ்ரீகாந் புத்தகசாலை, நல்லூர்

(15764)

### பிரத்தியேக கணித வகுப்புக்கள்

பேராதனைப் பல்கலைக்கழக பொது விஞ்ஞானத் தகுதி பெற்ற அனுபவமிக்க ஆசிரியரினால் 8-11 ஆண்டு A/L கணித மாணவர்களுக்கு கணிதம் வீடுகளில் சென்று கற்பிக்கப்படும் தொடர்பு:- Yarl Enterprises. 516, Hospital Road, Jaffna.

(15761)

### தரன் ஸ்ருடியோ

நபச்சில், கலர் - கறுப்பு-வெள்ளை பாஸ்போர்ட், அடையாள அட்டை, 12"X10" படங்கள், பிளாஸ்ரிக் விளம்பர போட் மற்றும் ஓவிய வேலைகளுக்கு 24, யாழ். வீதி ரெட்னா வீதி யாழ்ப்பாணம்.

(15710)

### நாற்றுக் கன்றுகள்

எம்மிடம் சிறந்த இனவிதை எலுமிச்சை, ஒட்டுத் தோடை நாற்றுக்கன்றுகள் விற்பனைக்குண்டு. ஐம்பது நாற்றுக்களுக்குமேல் தொகையாக எடுப்பவர்களுக்கு கழிவு உண்டு. சைவ வித்தியா விருத்திச் சங்கம் கலாசாலை வீதி, திருநெல்வேலி.

(C/5720)

### முக்கிய அறிவித்தல்

எனது வேலைத்தலத்தில் 363, கஸ்தூரியார் வீதியில் திருத்துவதற்கு கொடுத்த T.V. றேடியோ போன்றவற்றை இன்றைய திகதியில் இருந்து (6-2-91) ஒரு கிழமைக்குள் பெற்றுக்கொள்ளவும் அதற்குப் பின் அப்பொருள்களுக்கு நான் பொறுப்பாளி இல்லை என்பதை அறியத் தருகின்றேன்

(57651)

### காணவில்லை

முள்ளிபவளையைச் சேர்ந்த சி. சிவகுமார் எனும் 12 வயது ஆண் பிள்ளை, கட்டை உடல் கறுப்பு நிறம் 29-01-91 'அயோத்தி' சங்கிதா வீதி, (இராமலிங்கம் வீதி) திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம் எனும் முகவரி வீட்டில் இருந்து காணவில்லை இவர் பற்றிய தகவல் தெரிந்தவர்கள் மேலுள்ள முகவரியில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

(15760)

## இரண்டு தமிழருக்கு விருதுகள்

கொழும்பு, பெப். 6

இலங்கையின் சுதந்திர தினத்தை ஒட்டி கௌரவிக்கப்பட்ட தமிழர்களில் முன்னாள் அமைச்சர் கே. டபிள்யு. தேவநாயகத்துக்கு தேசமான்ய விருதும்— கலா சூரி விருது பெற்றவர்களில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் அடங்குகின்றனர். (அ-எ)

## யாழ்ப்பாண மாநகரசபை

## கலந்துரையாடல் 06 - 02 - 91

சிறு கைத்தொழில் திட்டங்கள் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடலொன்று 06 - 02 - 1991 ஆம் திகதி பிற்பகல் 2-30 மணிக்கு முறைசாராக் கல்வி அதிகாரிகளுடன் மாநகர அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. யாழ் மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் சகல சனசமூக நிலைய தலைவர்கள் / செயலாளர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் இக் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வி. பி. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
5-2-91.

(C/5731)

## கொக்குவில் இந்துக் கல்லூரி

### 1991 ஆம் ஆண்டில், ஆண்டு 6 வகுப்பில் அனுமதி பெறுவதற்கான

## பிரவேசப் பரீட்சை

மேற்படி பரீட்சை 1991-02-16ஆம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும்.

1991 - 02 - 11 ஆம் திகதிக்கும், 1991 - 02 - 14ஆம் திகதிக்குமிடையில் பரீட்சார்த்திகளின் பெற்றோர்/பாதுகாவலர், கல்லூரி அலுவலகத்திற்கு நேரடியாக வந்து பரீட்சை பிரவேசப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும்.

அ. பஞ்சலிங்கம்,
அதிபர்.

1991-02-06

(இ-5726)

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்.

(G. A. Q. பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களுக்கான

## B. A.

வகுப்புக்கள் ஆரம்பம்

9 - 2 - 1991 காலை 11 மணி

முற்குறிப்பு:

(G. A. Q. பரீட்சை முடிவுகள் கிடைக்காதவர்கள் எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளவும்.)

நிர்வாகி.

(இ-5727)

## முறைசாராக் கல்விப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், பெப். 6

முறைசாராக் கல்விப் பிரிவின் 1989 ஆம் ஆண்டு தொழிற்திறன் பயிற்சிப் பரீட்சைப் பெறுபேறுகள் யாழ். கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

அதன்படி கற்கைநெறி - உடையமைத்தல் பிரிவில் 26 பேரும் மோட்டர் பொறியியல் பாடநெறியில் 53 பேரும், ஹோட்டல் முகாமைத்துவ நெறியில் 14 பேரும், தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்து பாடநெறியில் 6 பேரும் சித்தி அடைந்தனர்.

இவர்கள் அனைவரும் யாழ். சனசரத்தினம் மத்திய மகா வித்தியாலய முறைசாராக் கல்விப்பிரிவில் கற்றுச் சித்தி அடைந்துள்ளனர். (இ-5)

## பொது அறிவுப்போட்டி

நவாலி, பெப். 6

நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தினர் எதிர்வரும் மகாசிவராத்திரி தினத்தை ஒட்டி பொது அறிவுப்போட்டி, சைவசமய அறிவுப்போட்டி என்பவற்றை அப்பகுதி மாணவ, மாணவியரிடையே நடத்துகின்றனர். (இ-100)

## கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளிநொச்சி

மேற்படி எமது சங்கத்தின் பின்வரும் பதவிக்கு கீழ்வரும் தகைமையுள்ள இலங்கைப் பிரஜைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிப்போர் தலைவர், கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம், கிளிநொச்சி என்னும் விலாசத்திற்கு தபாலின் இடது பக்க மேல் மூலையில் பதவியின் பெயர் இடப்பட்டு 18-02-91 அன்று நண்பகல் 12.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ ஒப்படைத்து உறுதிப்படுத்தவும். கீழ்வரும் தகைமைகளுக்கு அமைவாக உள்ள விண்ணப்பங்கள் மாத்திரம் பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

## பொது முகாமையாளர்

## பதவி வெற்றிடம் (101/6)

சம்பள அளவுத்திட்டம் மாதம்:

1305 - 60 × 4 - 75 × 11 - 2370ம் அங்கீகரிக்கப்பட்ட படிகள் யாவும்

1. கல்வித் தகைமைகள்:

அ. கூட்டுறவு ஊழியர் 7ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்தில் மூன்று வருடத்துக்கு குறையாத அனுபவமும் அல்லது கூட்டுறவு ஊழியர் 8ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/மேற்பார்வை மட்டத்தில் ஆறு வருடத்துக்கு குறையாத அனுபவம்.

'அல்லது'

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் அல்லது அதற்கிணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் நான்கு வருடத்திலான அனுபவம்.

'அல்லது'

இ. கூட்டுறவுப் பணியாளர் உயர்பிரிவு தராதரப் பத்திரம் அல்லது க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/தொழில்நுட்ப தாபனமொன்றின் முகாமை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

2. வயது:

25 தொடக்கம் 50 வரை

முக்கிய குறிப்பு:

1. சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களினதும், அனுபவ சான்றிதழ்களினதும், கல்விச் சான்றிதழ்களினதும், பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தினதும் போட்டோப் பிரதிகள் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.
2. மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போரில் தகைமையுடையவர்கட்கு 22-02-1991 முற்பகல் 10.00 மணிக்கு நேர்முகப்பரீட்சை எமது சங்க காரியாலயத்தில் (பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி) நடைபெறும்.

தலைவர்

கரைச்சி தெற்கு ப. நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.

(இ-5725)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 06 - 02 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வவுனியாவில் கொலைப்படை

**வ**வுனியாவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் கொலைகாரக் கூலிப்படை ஒன்று இயங்குவதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது. கண்காணிப்புக் குழு என்ற பெயரில் இயங்கும் அந்த இனந்தெரியாத கோஷ்டியில், இராணுவத்தினரில் ஒரு சாரரே அங்கம் வகிக்கின்றனர் என்பது தெரியவந்துள்ளதாம்.

இந்த இனந்தெரியாத குழு மக்களைக் கண்டபடி கைது செய்கிறது. தங்கள் கண்ணிற்படும் எல்லோரையும், காரணம் எதுவுமின்றி, கேள்வி நியாயம் இல்லாமல் கைது செய்கிறது. அவ்வாறு கைதுசெய்யப்பட்டோரில் 75 சதவீதமானோர் திரும்பி வரவில்லை. அவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள்!

இந்த அக்கிரமமான மனிதப் படுகொலைகள் குறித்து - அரக்கத்தனமான மனித உரிமை மீறலை - வவுனியாப் பிரசைகள் குழு அம்பலப்படுத்தி இருக்கிறது. அங்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் தூதுவரிடம் எடுத்துக்கூறி, அரச கூலிப்படையின் அராஜகமான மனிதக் கொலைகளை நிறுத்த உதவுமாறு விண்ணப்பித்துள்ளது.

இராணுவத்திலேயே ஒரு கூலிப்படையை — கொலைப்படையை — உருவாக்கி மக்களை அழித்தொழிப்பது இந்த அரசுக்கு ஒன்றும் புதியதல்ல. 1989ஆம் ஆண்டில் ஜே. வி. பி. கிளர்ச்சிவாதிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு அரசுக்கு ஆதரவளிக்காத 60,000க்கும் மேற்பட்ட சொதமக்களைக் கொன்ற "பச்சைப் புலிகள்" புகழ் அரசல்லவா இது! அதே நடைமுறையைக் கைக்கொண்டு, தமிழர்களை அழிப்பது ஒரு பழக்கப்பட்ட "கலை"யாக, தொழிலாகவே அதற்கு இருக்கும்.

தமிழர்களின் பிரச்சினையைத் தீர்ப்பது என்பது அவர்களை ஒழித்துக் கட்டுவதிலேயே உள்ளது என்ற கொள்கையுடன் அரசு செயற்பட்டு வருவது, தமிழ்ப் பகுதி நிலைமைகளைத் தெரிந்தவர்கள், புரிந்தவர்கள் அறிந்த விடயம். இராணுவ அக்கிரமங்கள், வான் தாக்குதல், பொருளாதாரத் தடை ஆகிய மார்க்கங்களுடன் கூலிப்படை மூலமான பேரழிப்பு படுகொலையும் (Mass Murders) சேர்க்கப்பட்டுள்ளது. அவ்வளவு தான!

இந்தத் திட்டமிட்ட இன ஒழிப்பை வெளி உலகம் இன்னும் தெரிந்தும் தெரியாதது போல் கண்ணை மூடிக்கொண்டு இருப்பது மிகவும் வேதனைக்குரியது. மனிதாபிமானம், மனித உரிமை குறித்து அக்கறையுள்ளவை என்று பீற்றிக் கொள்ளும் ஐரோப்பிய மற்றும் வெளிநாடுகளின் பிரதிநிதிகள் தமிழ்ப் பகுதிகளுக்கு வரவேண்டும்.

அவர்கள் தமிழ்ப் பகுதிகளில் பல நாட்கள் தங்கியிருக்க வேண்டியதில்லை. இரண்டு மூன்று நாட்களிலேயே தமிழர்கள் எவ்வாறு இன அழிப்புச் செய்யப்படுகிறார்கள், அவர்களின் மனித உரிமைகள், மற்றும் அடிப்படை உரிமைகள், அடிப்படை வசதிகள் எப்படி மறுக்கப்படுகின்றன என்பதை மிக இலகுவில் தாங்களே நேரில் கண்டு கொள்ளலாம்.

வவுனியாவுக்கு வந்த பிரிட்டிஷ் தூதுவர் யாழ்ப்பாணத்திற்கும், மட்டக்களப்பிற்கும், திருமலைக்கும் வந்து தமிழர் அழிக்கப்படுவது குறித்து மேலும் விபரங்களை நேரில் கண்டும், கேட்டும், துய்த்தும் அறிந்திருக்கலாமே! அவர் மட்டுமன்றி ஏனைய நாட்டுத் தூதுவர்களும் அவ்வாறு செய்வார்களா? செய்தால் என்ன? செய்யின் அது ஒரு மனிதாபிமான, தார்மீக உதவியாக அமையும்.

# வவுனியாவில் படையினர் கெடுபிடி; விவசாயத்தைப் பலர் கைவிட்டனர்

## பிரிட்டிஷ் தூதரிடம் பிரசைகள்குழு புகார்

98 சதவீதம் விவசாயிகளைக் கொண்ட வவுனியாவில் இம்முறை நல்ல மழை பெய்து குளங்கள் நிரம்பி உள்ள போதிலும், எதிர்பார்த்த அளவு விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் நெல் உற்பத்தி இம்மாவட்டத்தில் பெரும் அளவு குறைந்துள்ளது.

சமீபத்தில் வவுனியாவுக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் திரு. டேவிட் கிளட்ஸ்ரோனிடம் வவுனியா பிரசைகள் குழுவினர் மேற்கண்ட விபரத்தை தெரிவித்தனர்.

எரிபொருள் இன்மை, பசளை வகைகளைக் கொண்டு செல்வதற்கு இருந்து வரும் கடும் கட்டுப்பாடுகள், விதை நெல் எடுத்துச் செல்லும் வாகனப் போக்குவரத்து வசதிகள் இல்லாத நிலைமை, வவுனியா-யாழ். வீதித்தடைமுகாமினூடாக சைக்கிள்களைக் கொண்டு செல்லமுடியாமை போன்ற காரணங்களினால் வழமை போல் விவசாயச் செய்கையை மேற்கொள்ள முடியாமற் போனது என்று பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர்.

வடபகுதியில் உள்ள மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் யாழ் மாவட்டங்கள் போன்ற, வவுனியா நகரின் வடபகுதியில் உள்ள கிராமப் புறங்களுக்கும் எரிபொருள், மண்ணெண்ணெய், மற்றும் பாவனைப்பொருள்கள் மருந்துவகைகள், அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொண்டு செல்ல முடியாமல் உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-'64)

## கற்கைநெறி விரிவுரைகள்

அச்சுவேலி, பெப். 6

யாழ் பல்கலைக் கழகத்தில் பட்டதாரி ஆசிரியர்களுக்காக நடைபெறும் "கல்வி பட்டப்பின் டிப்ளோமா 1989/90" முழுநேர கற்கைநெறி கள விரிவுரைகள் இம்மாதம் 11ஆம் திகதி ஆரம்பமாகும்.

அண்மையில் கல்வி அமைச்சு அனுப்பி வைத்த 75 ஆசிரியர்களைக் கொண்ட பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கும், கடந்த வருடம் தெரிவு செய்யப்பட்ட தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கும் விரிவுரைகள் நடைபெறும்.

(இ-11)

# புலிகளின் முத்தமிழ் விழா மார்ச் இறுதியில் நடக்கும்

யாழ்ப்பாணம், பெப். 6

விடுதலைப்புலிகள் கலை கலாசாரப்பிரிவினரால் மார்ச் மாத இறுதியில் முத்தமிழ் விழா கோலாகலமாக நடத்தப்படவுள்ளது.

தொடர்ந்து 9 நாட்கள் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் இயல், இசை, நாடகம் என மூன்று பிரிவுகளில் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

விழாவில் பங்கேற்க விரும்பும் இசை, நடன, நாடகக் கலைஞர்கள் கோண்டாவிலில் அமைந்துள்ள கலை கலாசார பிரிவினரோடு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் நாட்டிய நாடகம், நவீனநாடகம், இசைநாடகம் என மூன்று பிரிவாக நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன.

30 முதல் 45 நிமிடநேரம் மேடையேற்றக்கூடிய நாடகங்கள் நாடகக்கலைஞர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதாகவும் - சகல ஆக்கங்களையும் இம் மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்குமாறும் முத்தமிழ் விழாப்பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

(இ-5)

# கிளிநொச்சி அணைக்கட்டை திருத்தும் வேலை ஆரம்பம்

கிளிநொச்சி குளத்தின் உடைந்த அணைக்கட்டைத் திருத்தும் வேலைகள் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த வருடம் ஜூன் மாதம் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின்போது இந்த அணைக்கட்டு சேதமடைந்தது.

தற்போது கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் தனது ஊழியர்களைக் கொண்டு அணைக்கட்டைத் திருத்தி அமைத்து வருகின்றது.

[இ-76]

# கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை குறைந்து வருகிறது

யாழ்ப்பாணம், பெப். 6

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மேற்கொண்ட நடவடிக்கைகளை காரணமாக பல பகுதிகளிலும் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை குறைந்து வருகிறது.

அண்மையில் அளவெட்டி இழக்குப் பகுதியில் நெற்பயிர்களை மேய்ந்து நாசம் செய்த ஒரு மாடு கமக்காரரால் பிடிக்கப்பட்டு அப்பகுதி பிரதேச அலுவலகத்தில் விடப்பட்டது.

உரிமையாளர் நஷ்டஈடு செலுத்தி மாட்டைப் பெற்றுக்கொள்ள முன்வராததால் பின்னர் அந்த மாடு ஏலத்தில் விற்கப்பட்டது. விவசாயி ஒருவர் மாட்டை ஆயிரத்து 50 ரூபா செலுத்திப் பெற்றுக்கொண்டார்.

தற்போது கட்டாக்காலிகளின் சொந்தக்காரரிடமிருந்து பிடிவரியாக மாட்டுக்கு 50 ரூபாவும், ஆட்டுக்கு 25 ரூபாவும், குற்றப்பணமாக மாட்டுக்கு 50 ரூபாவும், ஆட்டுக்கு 25 ரூபாவும் அறவிடப்படுகிறது.

கட்டாக்காலியினால் அழிக்கப்பட்ட பயிருக்குரிய பணமும் ஒரு மதிப்பீட்டின்படி கோரப்பட்டு வருகிறது.

(இ-5)

# வளைகுடா செய்திகள்

## பெரஸ் டி குயிலர் கண்டனம்

★ ஈராக் ஊடாக சென்று கொண்டிருந்த ஜோர்தானிய டிரக்குகள் மீது பன்னாட்டுப் போர் விமானங்கள் கடந்த திங்கள் இரவு நடத்திய தாக்குதலை ஐ.நா. பொதுச்செயலாளர் பெரஸ் டி குயிலர் நேற்று வன்மையாகக் கண்டித்தார்.

போரில் சம்பந்தப்படாத நாடான ஜோர்தான் இருந்தும் அந்த நாட்டின் சிவிலியன்கள் தாக்குதலுக்கு உள்ளானது கவலை தருவதாக உள்ளதாகவும் திரு. குயிலர் கூறினார்.

ஈராக்கில் இருந்து ஜோர்தானுக்கு எரிபொருளை ஏற்றிச் சென்ற டிரக்குகளே தாக்குதலுக்குள்ளாகின என்று தெரிவிக்கப்பட்டது.

## குழந்தைகள் மரணம்

★ பன்னாட்டுப் போர் விமானத்தாக்குதல்களினால் பெரும் எண்ணிக்கையில் குழந்தைகள் இறப்பதாகவும் - கர்ப்பிணிகள் ஏராளமானோர் குறைமாதப் பிரசவங்களுக்கு இலக்காகின்றனர் என்றும் ஈராக் நேற்று குற்றஞ்சாட்டியது.

இந்த அநீதிகளுக்கு எல்லாம் உரியவர்களை ஈராக் பழிவாங்காமல் விடாது என்று ஈராக் மேலும் அறிவித்தது.

## சூடானில் ஈராக் விமானங்கள்?

சூடானிலும் ஈராக் தனது போர் விமானங்களில் 20 ஐ ஒளித்து வைத்திருப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

'ஸ்கட்' ஏவுகணைத் தளங்களையும் ஈராக் சூடானில் அமைத்துள்ளதாக இரகசியச் செய்திகள் வெளியாகியுள்ளன.

வளைகுடாப் போரின் இறுதிக் கட்டத்தில் பன்னாட்டுப் படையினர் மீது திடீர்த் தாக்குதலை நடத்தும் ஒரு நடவடிக்கையாக இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

## குடிமக்கள் பகுதியில் தளங்கள்

ஈராக் தனது இராணுவக் கட்டளை பிறப்பிக்கும் தளங்களையும், போர்க்கருவிகளையும் சிவிலியன் பிரதேசங்களுக்கு இடமாற்றம் செய்வதாகவும் அமெரிக்கா நேற்று அறிவித்தது.

## 327 பேர் மட்டும் உயிரிழப்பாம்

பன்னாட்டுப் போர் விமானங்கள் நடத்தும் தாக்குதலில் பக்தாத்தில் இதுவரை 327 பொதுமக்கள் உயிரிழந்தனர் என்றும் 400 பேர் வரை காயமடைந்தனர் என்றும் ஈராக் உத்தியோகபூர்வமாக அறிவித்திருப்பினும் - உயிரிழந்தோர் எண்ணிக்கை இன்னும் அதிகமாகும் என்றும் செய்தி ஸ்தாபனங்கள் அறிவித்துள்ளன.

இதேவேளை பன்னாட்டுப் போர் விமானங்களின் தாக்குதலுக்கு இதுவரை சுமார் 2 லட்சம் ஈராக்கியர் உயிரிழந்திருக்கலாம் என்று அஞ்சப்படுவதாக துருக்கி நாளிதழ் ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

★ ★ ★

ஈராக்கில் உள்ள 'ஸ்கட்' ஏவுகணைத் தளங்களைக் கண்டறிய ரி. ஆர். ஏ. ரக நவீன போர் விமானங்களை பன்னாட்டுப் படைகள் நேற்று முதல் பயன்படுத்த ஆரம்பித்துள்ளன என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

விண்ணில் வலம் வரும் செய்மதிக் கோள்களின் வேகத்திலும் பார்க்க கூடுதல் வேகத்தில் இவ் விமானங்கள் செல்லக் கூடியவை என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிப் பகுதியில் மலேரியா மிகத்தீவிரம்

யாழ்ப்பாணம், பெப். 6

கிளிநொச்சி மாவட்டத்தில் மலேரியா மிகத்தீவிரமாகப் பரவி வருகிறது. ஆனால் அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் சுகாதாரப் பகுதியினர் திண்டாடுகின்றனர். டி.டி.ரி மற்றும் மலத்தியோன் ஆகிய நோய் தடுப்பு மருந்துகள் இல்லாமையே இதற்குக் காரணமாகும்.

வருடாந்தம் சராசரியாக சுமார் 10 சத விதமானோரே கிளிநொச்சியில் மலேரியாவினால் பாதிக்கப்படுவது வழக்கம். ஆனால் இம்முறை 85 சதவிதமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்னர் கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு மலத்தியோன் அனுப்பப்படவில்லை இது குறித்து பல தடவைகள் மேலிடத்துக்கு அறிவித்தும் பலன் கிடைக்கவில்லை என்று சுகாதாரப் பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச அதிபரும் இது விடயத்தில் முயன்ற போதிலும், மலத்தியோனைக் கொண்டு வர கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் இன்னும் அனுமதி தருவதாக இல்லை. (அ-15)

# பரந்தன் தொழிற்சாலை மீதும் குண்டு வீச்சு!

கிளிநொச்சி, பெப். 6

பரந்தன் இரசாயனப் பொருள்கள் கூட்டுத்தாபனத்தின் மீது, ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டு வீச்சின் போது தொழிற்சாலைக் கட்டடங்கள் சேதமடைந்தன.

தொழிற்சாலை கடந்த பல மாதங்களாக மூடப்பட்டு உள்ளதால் உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டன. (இ 76)

# சீமெந்து ஆலை ஊழியர் ஊர்வலம் நடத்த முஸ்தீபு

சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்கள், தமக்குச் சம்பளம் வழங்கக் கோரி ஊர்வலம் ஒன்றை நடத்த உள்ளனர்.

இதற்கான தீர்மானம் ஒன்று கடந்த திங்கட்கிழமை யாழ் நகரில் நடைபெற்ற கூட்டுத்தாபன —பொதுத் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

★ காங்கேசன்துறைப் பகுதியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்கள் நூறு சத வீதமானோரும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களுக்கு இலவச நிவாரணம் தொடர்ந்து வழங்க அரச அதிபரைக் கோருதல்.

★ கொழும்பில் தலைமைப் பீடத்துடன் தொடர்பு கொண்டு சம்பளம் பெற்றுக் கொள்ள முயற்சித்தல்.

மேற்கண்ட இரண்டு தீர்மானங்களும் சங்கத் தலைவர் திரு நா. நடராசா தலைமையில் நடந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (அ-8)

# உருத்திரபுரத்தில் நேற்றும் குண்டு வீச்சு!

கிளிநொச்சி, பெப். 6

உருத்திரபுரம் கூளாவடிச் சந்தியில் நேற்றும் இரண்டாவது நாளாக விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் குண்டு வீச்சு நடத்தப்பட்ட அதே இடத்தில் நேற்றுக் காலையும் 9.45 மணியளவில் பொம்மர் ஒன்று குண்டுகளை வீசியது.

நேற்றைய தாக்குதலில் கூளாவடிச் சந்தியில் உள்ள சமூக சேவை நிலையம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், மற்றும் நேற்று முன்தினம் தாக்குதலில் எஞ்சியிருந்த கடைகள் ஆகியன சேதமுற்றன.

நேற்று முன்தினம் தாக்குதலில் உயிரிழந்த பத்துப் பேரினதும் இறுதிச் சடங்குகள் உருத்திரபுரத்தைச் சூழவுள்ள இடங்களில் நேற்று நடைபெற்றுக்கொண்டிருந்தபோது — அதற்காக அப்பகுதியில் மக்கள் கூடியிருந்த வேளை — நேற்றைய விமானத் தாக்குதல் இடம்பெற்றது. (உ-76)


## மரண அறிவித்தல்

### திருமதி இராசரத்தினம் சின்னம்மா

அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது ஆவரங்கால் சிவன் கோவில் வீதியில் வசித்தவருமாகிய திருமதி இராசரத்தினம் சின்னம்மா காலமாகிவிட்டார்.

ஈமக்கிரியைகள் 5-2-91 ஆந் திகதி நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. துரைசிங்கம்
(மருமகன்)

சாமி வீதி
(15421)


# தமிழகத்தில் தேர்தல் எந்நேரமும் நடக்கும்

சென்னை, பெப். 6

தமிழகத்தில் சட்ட சபைப் பொதுத் தேர்தலை எச்சமயத்திலும் நடத்த மாநில நிர்வாகம் தயாராக இருப்பதாக தலைமைச் செயலாளர் டி. வி. அந்தோனி நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இது குறித்து மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரியுடன் பேச்சுக்கள் நடத்தப்பட்டதாகவும் அவர் சொன்னார்.

இதேவேளை தேர்தலை எந்நேரத்திலும் எதிர்கொள்ள தி.மு.க. தயாராக இருப்பதாக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி நேற்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (உ-எ)

# அ. தி. மு. கவுக்கு அதிக தொகுதிகள்

சென்னை, பெப். 6

தமிழ்நாடு சட்டசபைக்கான தேர்தலில் போட்டியிடுவது குறித்து அ. தி. மு. கவும் இந்திரா காங்கிரஸும் தொகுதி உடன்பாடு கண்டுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது.

நேற்று புதுடில்லியில் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்திக்கும் அ. தி. மு. க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதாவுக்கும் இடையே நடந்த ஒன்றரை மணித்தியாலப் பேச்சுக்களின் போது இந்த உடன்பாடு காணப்பட்டதாக சென்னையில் உள்ள அ. தி. மு. க. தலைமைச் செயலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்பாட்டின்படி தமிழ்நாடு சட்ட சபையின் மொத்தமான 234 தொகுதிகளில் —

அ. தி. மு. க. 168 தொகுதிகளிலும் இந்திரா காங்கிரஸ் 66 தொகுதிகளிலும் போட்டியிடும் என்று அறிவிக்கப்படுகிறது.

தமிழ்நாடு சட்டசபைக்கான பொதுத் தேர்தலை விரைவில் நடத்தும்படி மத்திய அரசை வற்புறுத்துவது என இரு கட்சிகளும் தீர்மானித்துள்ளன என்றும் அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# ஈராக் மக்களுக்கும் எரிபொருள் இல்லை

நேற்றிலிருந்து பொதுமக்களுக்கான எரிபொருள் விநியோகத்தை கால வரையறையின்றி நிறுத்தி வைப்பதாக ஈராக் அரசு நேற்று அறிவித்தது.

தொழில் நுட்ப சேதங்கள் காரணமாக எரிபொருள் விநியோகம் நிறுத்தி வைக்கப்படுவதாக பக்தாத் வானொலி தெரிவித்தது.

# ஜோர்தானியர் பலி

பன்னாட்டுப் போர் விமானங்கள் நடத்திய தாக்குதலில் 6 ஜோர்தானியர்கள் உயிரிழந்தனர் என்றும் 30 ஜோர்தானிய ட்ரக்குகள் அழிக்கப்பட்டன என்றும் ஜோர்தான் அரசு அறிவித்துள்ளது.

ஈராக்கில் இருந்து எரிபொருளை இந்த வாகனங்கள் ஏற்றிக்கொண்டு வருகையில், ஈராக் பிரதேசத்தில் அவை தாக்குதலுக்கு இலக்காகின.

# மாவை பகுதியில் ஷெல் தாக்குதல்!

யாழ்ப்பாணம், பெப். 6

மாவிட்டபுரம், கட்டுவன் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுக் காலை முதல் தொடர்ச்சியாக குடியிருப்புப் பகுதிகளை நோக்கி துப்பாக்கிப் பிரயோகங்களையும் ஷெல் தாக்குதல்களையும் மேற்கொண்ட வண்ணம் இருந்தனர். (உ-15)

# தீ மிதிப்பும் அன்னதானமும்

கொடிகாமம், பெப். 6

தமிழீழ விடுதலைப் புலிகளின் நலனுக்காக கொடிகாமம் அருள்மிகு கானமா முனியப்பர் கோவிலில் வருடாந்த தீ மிதிப்பு அபிஷேகமும் அன்னதானமும் நடைபெற்றன. (இ-75)

# சந்திரசேகர்-தேவிலால் மத்தியில் கருத்துமோதல்

புதுடில்லி, பெப். 6

பிரதமர் சந்திரசேகருக்கும் துணைப் பிரதமர் தேவிலாலுக்கும் இடையே கருத்து வேறுபாடு தோன்றியுள்ளதாக புதுடில்லியில் அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடத் தொடங்கி உள்ளது.

பி.ரி.ஐ செய்தி ஸ்தாபனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் திரு. தேவிலாலிடம் இதுகுறித்துக் கேள்வி தொடுக்கப்பட்டது. அதற்கும் பதிலளிக்கையில் —

"பிரதமர் சந்திரசேகருடனும் இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தியுடனும் எனக்கு நல்ல புரிந்துணர்வு உள்ளது" — என்று மட்டுமே சொன்னார்.

இந்தியாவுக்குத் தற்போது தேவைப்படுவது தேசிய அரசாங்கம் ஒன்று தான் என்று பாரதீய ஜனதாக் கட்சி கோரியுள்ளது பற்றி கருத்து வெளியிடுகையில் —

"இக் கோரிக்கையை நான் வரவேற்கின்றேன். நாட்டிற்கு தேவைப்படும் அரசியல் ஸ்திரத்தை தேசிய அரசால் தான் வழங்க முடியும்" — என்று தேவிலால் சொன்னார்.

# உருத்திரபுரம் குண்டு வீச்சு; 11 ஆவது நபரும் மரணம்

யாழ்ப்பாணம், பெப். 6

கடந்த திங்கட்கிழமை உருத்திரபுரத்தில் நடந்த பொம்மர் தாக்குதலில் இறந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்ந்துள்ளது.

பிரஸ்தாப சம்பவத்தில் படுகாயமடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த நீ[illegible]லச் சேர்ந்த அப்பு (65 வயது) நேற்று மரணமானார் அவரே இறந்த 11 ஆவது நபராவார். (அ-15)

# அரச சார்பற்ற நிறுவனங்கள் தரிசு நிலங்களில் பயிர்ச் செய்கை

யாழ்ப்பாணம், பெப். 6

குடாநாட்டில் உள்ள தரிசு நிலங்களில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த நடவடிக்கைகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபடவுள்ளன.

கடந்த வாரம் இடம்பெற்ற யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் சந்திப்பில் இது பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள சுமார் 5 ஆயிரம் ஏக்கர் தரிசுநிலங்களில் சுமார் 3 ஆயிரத்து 500 ஏக்கர் நிலத்தை அரச சார்பற்ற நிறுவனங்கள் பங்கிட்டு அவற்றில் சிறுதானியப் பயிர் உற்பத்தியை மேற்கொள்ள ஆலோசிக்கப்பட்டுள்ளது. (உ-5)

# கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், பெப். 6

அண்மையில் இன அழிப்பில் பலியான பல்கலைக் கழக மாணவர் இருவர் நினைவாக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருந்த அஞ்சலிக் கூட்டம் நேற்று நடைபெறவில்லை.

இக்கூட்டம் நாளை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் என யாழ். பல்கலைக் கழக மட்டக்களப்பு- அம்பாறை மாவட்ட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (உ-5)

# திறந்த பல்கலை, பரீட்சை

யாழ்ப்பாணம், பெப். 6

திறந்த பல்கலைக் கழகத்தின் உயர்தொழில் ஆங்கிலக் கற்கைநெறிக்கான தரப்படுத்தும் பரீட்சை எதிர்வரும் 10 ஆம் திகதி காலை 10 மணிக்கு கொக்குவிலில் உள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெற உள்ளது.

இப்பரீட்சைக்குரிய கடந்த கால வினாப் பத்திரங்களை திங்கள் தவிர்ந்த ஏனைய நாட்களில் பார்த்துப் பிரதி செய்வதற்குப் பிராந்திய நிலையத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது. (அ)

# கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 6

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த சாலைகளின் ஊழியர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 7 மணிக்கு தலைமைக்காரியாலயத்தில் நடைபெற இருப்பதாக தமிழ்பேசும் போக்குவரத்து ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. (உ)

# தமிழகத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தது

வன்செயல்களைத் தவிர்ப்பதற்காக இன்று ஹர்த்தால் நடத்த வேண்டாம் என்று தி.மு.க.வையும் அதன் தோழமைக் கட்சிகளையும் கோரும் விளம்பரம் ஒன்றை மாநில ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா நேற்றைய 'இந்து' ஆங்கில நாளிதழின் முதல் பக்கத்தில் வெளியிட்டிருந்தார். (உ-எ)

# வவுனியா..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீது கண்வைத்து அவர்களை இம்சைப்படுத்திய இராணுவ — இலக்கப் பேர்வழிகள் இப்போது இளம் குடும்பத்தவர்கள் பக்கம் தமது கவனத்தைத் திருப்பி உள்ளனர். (அ-15)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org